‘டானிடா’ திட்டத்தை செங்கற்பட்டு மாவட்டத்திற்கு விஸ்தரிக்கும் திட்டம்.

*476—(வினா எண் 21107) திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்திற்கு ‘டானிடா’ திட்டம் விஸ்தரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயலுக்கு வரும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவரவர்களே, தமிழ் நாட்டில் ‘டேனிடா’ திட்டம் எங்கெங்கே செயல்படுகிறது? அதற்கு நம்முடைய அரசு எவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, இந்த டேனிடா திட்டத்தைப் பொறுத்தவரையில் 1-8-1981 லிருந்து 31-7-1986 வரையிலான ஐந்தாண்டுத் திட்டமாக இதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். 14.40 கோடி ரூபாய் இந்த ஐந்தாண்டுகளில் செலவிடப்படும். டென்மார்க் என்ற நாட்டின் உதவி 12.72 கோடி ரூபாய், மீதமுள்ள பணத்தை தமிழக அரசு செலவிடும். சேலம் மாவட்டத்திலும் தென்னாற் காடு மாவட்டத்திலும் இந்தத் திட்டத்தை நாம் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.

ஈரோடு நகரத்தின் சுற்றுவட்டாரத்திலுள்ள சாயப்பட்டரைகளிலிருந்து வெளியாகும் கழிவு நீர்.

*477—(வினா எண் 19660) திரு. கு. ரமணி: மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், ஈரோடு நகரத்தில் சுற்று வட்டாரத்தில் சாயப்பட்டரைகள் ஏராளமாக உள்ளதிலிருந்து வெளிவருகிற இரசாயனப் பொருள் கலந்த கழிவுநீர் தேங்கி நின்று நிலத்தடி நீரைக் கெடுத்து வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தக் கழிவு நீரை வெளியே அகற்றி சுகாதாரத்தைப் பாதுகாக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

1984 மார்ச் 27]

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நான் கேட்ட கேள்வியில் என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டிருக்கிறேன். அந்த நடவடிக்கை விவரங்களை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே, இந்தக் கழிவுநீரை வெளியேற்றும் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் இந்த வாரியத்தின் அனுமதியைப் பெற வேண்டும் என்றும், பதிவு செய்ய வேண்டும் என்றும் சொல்லி அதற்கான காலவரையறை வகுக்கப்பட்டிருக்கிறது.

அது அனுமதிபெற்றோ அல்லது பதிவு செய்த பின்னர், கழிவு நீரை எப்படி வெளியேற்றவேண்டுமென்று அவர்களுக்கு அறிவுரை கொடுக்கப்பட்டும், அறிவுரையை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அந்தத் தொழிலதிபர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அந்த அடிப்படையில் இந்தத் தொழிற்சாலைகள் தனித்தனியாக பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அது சரியான முறையில் கழிவு நீரை மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது. அப்படிச் செய்யாவிட்டால், அந்தத் தொழிற்சாலைகளின் உரிமம் புதுப்பிக்கப்படுகின்ற நேரத்தில், வாரியத்தின் அனுமதி பெறவேண்டும். அனுமதி பெற்ற பிறகு, மீண்டும் அந்தத் தொழிற்சாலை இயங்க வேண்டிய காரணத்தினால், கழிவு நீரை நன்நீராக மாற்றாமல் விட்டுவிட்டால், அந்தத் தொழிற்சாலைக்களுக்கான உரிமத்தைப் பறிக்கக் கூடிய நிலை எற்படும். அந்த முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி ; தலைவர் அவர்களே, ஈரோட்டு நகராட்சிக்குள்ளே, இப்படிப்பட்ட பல தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதனுடைய எண்ணிக்கைகூட அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். நகராட்சியைச் சுற்றியுள்ள பெல்ட் ஏரியாக்களிலும் மேஜர் பஞ்சாயத்துக்களைச் சுற்றிலும் எக்கச்சக்கமான தொழிற்சாலைகள் சாயப் பொருள்களை உபயோகப்படுத்தி அங்கே வேலைகள் நடந்து வருகின்றன. அப்படியானால், இப்படிக் கழிவு நீரை வெளியேற்றாமல் இருப்பதனால், அங்கேயுள்ள கிணற்று நீர் கெட்டுப்போய்விடுகிறது. அதை ஒழுங்குபடுத்துவதற்கும், சுத்தப்படுத்துவதற்கும் பல இயந்திரங்கள்

வைத்திருப்பதாகத் தெரியவில்லை. நானே அந்தத்தொழிற்சாலைகளைப் பார்த்திருக்கிறேன். இது ஒரு பெரிய நியூசன்ஸ் என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். பெரும் வியாதிகள் பரவக் கூடிய தன்மை இருக்கிறது. உருப்படியான நடவடிக்கைகள் எத்தனை தொழிற்சாலைகளில் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, ஈரோட்டைப் பொறுத்தவரையில், சுற்று வட்டாரத்தில் அமைந்துள்ள பேருராட்சிகளில் உள்ள சாயப்பட்டறைகளின் விவரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| வீரப்பன்சத்திரம் .. .. .. .. | 74 |
| சித்தோடு .. .. .. .. | 4 |
| பெரிய செம்மூர் .. .. .. .. | 16 |
| நசியானூர் .. .. .. .. | 1 |
| சூரியம்பாளையம் .. .. .. .. | 19 |
| பிராமண பெரிய அக்ரஹாரம் .. .. | 8 |
| காசிபாளையம் .. .. .. .. | 15 |
| ஈரோடு ஊராட்சி ஒன்றியம் .. .. | 72 |

மேற்கூறப்பட்ட தொழிற்சாலைகளில் சில தொழிற்சாலைகள் தங்கள் கழிவு நீரை எந்தவித சுத்திகரிப்புமின்றி தொழிற்சாலைகளுக்குச் சொந்தமான நிலங்களில் வெளியேற்றுகின்றன. சில தொழிற்சாலைகள் பொது வடிகால்களிலும், ஓடைகளிலும் கழிவு நீரை வெளியேற்றுகின்றன. ஆனால், கடைசியாக இந்தக் கழிவு நீரானது காவிரியாற்றில் கலக்கிறது. ஆகவே இது சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை வாரியம் எடுத்துக்கொண்டிருக்கிறது. இந்த வாரியம் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், நச்சுநீர் காற்றிலே மாசுபடுத்தப்படுவதை உடனடியாக செய்துவிட முடியாது. காரணம் தமிழ்நாடு முழுவதும் பரவியிருக்கிறது. ஏறக்குறைய 8000-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமேயானால், தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். தொழிற்சாலைகளும் பாதிக்கப்படும். அதே போல் நிலம், நீர் காற்று மாசு படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.